RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2211

OPEN ACCESS

# சுயமரியாதை இயக்கம் முன்வைத்த பெண்ணியச் சிந்தனைகள் - ஒரு வரலாற்றுப் பார்வை

**ச. ஜீவானந்தம்** [அ, *]

[அ] வரலாற்றுத் துறை, சிக்கிம் பல்கலைக்கழகம் (மத்திய பல்கலைக்கழகம்), சிக்கிம், இந்தியா

# Feminist Ideologies of the Self-Respect Movement – A Historical Study

**S. Jeevanandam** [a, *]

[a] Department of History, Sikkim University (A Central University), Sikkim, India

* Corresponding Author: jeeandm@gmail.com

Received: 03-10-2021
Revised: 21-11-2021
Accepted: 24-11-2021
Published: 28-01-2022

Check for updates

**ABSTRACT**

Women are an essential component of the human society. However, women do not get their respect and rights in the ages due to the deeply institutionalized patriarchal values. There were many feminist movements emerged globally to address these differences where they articulated different strategies for women liberation such as equal education, employment, civil rights, valuing women's bodies and their rights in the society. In this context, the foundation of the self-respect movement in India was became a crucial movement to address the social inequality in the society. The movement was started in 1925 by Thanthai Periyar E.V. Ramasami. The movement completely believed women as an active social agent and trusted that the freedom of women would lead to a revolution in the society. The movement became a platform for women to articulate their views. The movement proposed some of the significant strategies for women liberation and empowerment, which was pioneer to the many women's movements in the world. On this background, this particular paper is trying to study the feminist ideologies that were proposed by the Self-Respect Movement.

**Keywords:** Women Liberation, Feminist Ideologies, Self-Respect Movement.

## முன்னுரை

உலக மக்கள் தொகையினில் சரிபகுதியாகிய பெண் மக்களின் விடுதலைக்காக உலகின் பல பகுதிகளில் பல இயக்கங்கள் போராடிய பொழுதும், மானிட இனவிடுதலைக்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள தமிழகத்தினில் 1925-ம் ஆண்டு தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களால் தொடங்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் முன் முயற்சிகள் என்பது பெண்ணின விடுதலையில் ஒரு தனித்த கவனத்தினைப் பெறுகின்றன.

சுயமரியாதை இயக்கமானது பொதுவாகவே பெண்களுக்கான ஒரு கருத்தியல் தளமாக இருந்து பெண் மக்கள் விடுதலைக்காக மிகத் தீவிரமாக உழைத்து, எப்பொழுதும் பெண்களின் மறுமலர்ச்சிக்கும், சீர்திருத்தத்திற்கும் குரல் கொடுத்து வந்ததுடன், பெண் விடுதலை என்பதனை இயக்கத்தின் ஓர் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகவும் கொண்டிருந்தது. இந்த வகையினில் இக்கட்டுரையானது சுயமரியாதை இயக்கம் முன்வைத்த பெண்ணியச் சிந்தனைகளை பெண்ணிய ஆளுமைகளாக உலக அரங்கினில் போற்றப்படும் மேற்கத்திய பெண்ணியவாதிகளின் கருத்துகளுடன் எவ்வாறு பொருந்தி போகின்றது என்பதை வரலாற்று தரவுகளுடன் விளக்க முற்படுகின்றது.

## சுயமரியாதை இயக்கத்தினரும், அவர்கள் முன்வைத்த பெண்ணியச் சிந்தனைகளும்

பொதுவாகவே தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களும், சுயமரியாதைக்காரர்களும் உலக வரலாற்றினில் முன்வைத்த கருத்துக்கள் என்பவைகள் பெற வேண்டிய உரிய இடத்தினில் வைத்து விவாதிக்கபடவே இல்லை (Aanaimuthu, 2009). 1960-களில் மேற்கத்திய உலகம் பேசிய பெண்ணியச் சிந்தனைகளை, தந்தை பெரியார் அவர்களும், இன்னும் பிற சுயமரியாதைக்காரர்களும் 1930-களிலேயே மிக எளிமையாக எந்தவொரு சமூக-கலாச்சார-பண்பாட்டு நிர்பந்தங்களுக்கும் ஆளாகாமல், எந்தவொரு அறிவுச் செருக்கும் இன்றி மக்களிடம் முன்வைத்து களத்தினில் இறங்கி சமூக மாற்றத்திற்கான முன்னெடுப்புகளைச் செய்து வந்தனர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும் (Rajadurai & Geetha, 1999).

உலக வரலாற்றினை எடுத்துக் கொண்டால் பெண்ணின விடுதலை எழுச்சியின் கருத்தியல் பரிணாம வளர்ச்சியினைப் பற்றிக் குறிக்க பரவலாக மூன்று வகையான பெண்ணிய அலைகளைப் (Waves of Feminism) பற்றி குறிக்கின்றனர். இந்த அலைகள் பெரும்பாலும் கால வெளியினைக் கடந்து கருத்தியல் ரீதியாக வகைப்படுத்தப் படுகின்றது. ஒவ்வொரு அலையும் ஒன்றின் போதமைகளில் இருந்து மேம்படுத்தப்பட்டதாக இருக்கும் வகையில் இடைநில்லாமல் கடலலை போல ஆர்பரித்து வரக்கூடியதாக இருக்கின்றது. பெண்ணின எழுச்சிக்கு அத்தியாவசியமென அவர்கள் கருதிய சில வழிமுறைகளை (strategy) காலம்தோறும் பல்வேறு தளங்களில் முன்வைத்து பெண் விடுதலையினைப் பற்றி பேசலாயினர்.

அவர்களில், மேரி உல்ஸ்டோன் க்ராஃப்ட் (1759-1797), எலிசபெத் காடி ஸ்டேன்டோன் (1815-1902), சிமோன் டி பிவோர் (1908-1986), பெட்டி ஃப்ரைடன் (1921-2006), ஷூலமித் ஃபைர்ஸ்டோன் (1945-2021), சொஜொர்னெர் ட்ரூத் (1797-1883), பெல் ஹூக்ஸ் (1952), நோமி ஊல்ஃப் (1962) மற்றும் ஏஞ்சலா டேவிஸ் (1944) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். சுயமரியாதை இயக்கத்தினர் முன்வைத்த பெண்ணிய வாதங்களும் மேற்குறிப்பிட்ட மேற்கத்திய பெண்ணிய சிந்தனையாளர்களின் வாதங்களும் பல்வேறு புள்ளிகளிலும் ஒத்துப் போகின்றன. அதனை பின்வரும் வாதங்களின் மூலம் அறியலாம்.

## பெண் விடுதலையும், சுயமரியாதை இயக்கமும்

இந்தியாவில் நிலவி வந்த பெண்களின் மோசமான நிலைமையினையும் அவர்களின் அடிமைத்தனத்தையும் பற்றி கவலை கொண்ட சுயமரியாதைக்காரர்கள், அத்தகைய ஆணாதிக்க அமைப்பின் அடிப்படைக் கட்டுமானங்களைக் கேள்விக்கு உட்படுத்தினர் என ஆய்வாளர் ஸ்ரீவித்யா நடராஜன் அவர்கள் குறிப்பிடுகின்றார் (Natarajan, 1997).

'ஆண்மை', திருமணம், சொத்துரிமை, பர்தா முறை, மணவிலக்கு, குழந்தைத் திருமணம், தேவதாசி முறை, விபச்சாரம், கருத்தடை, பாலியல் சமத்துவமற்ற மொழியியல் மற்றும் உளவியல் கூறுகள், போன்ற பல்வேறு சமூகப் பிரச்சினைகளைக் குறித்து தீர்க்கமான விமர்சனப் பார்வைகளைக் சுயமரியாதைக்காரர்கள் கொண்டிருந்தனர். பாலினச் சமத்துவத்திற்கான முக்கியத்துவத்தினை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு சார்ந்த கருத்துகளை பொதுமக்களிடம் ஏற்படுத்துவதையே மிகமுக்கிய வேலையாகச் சுயமரியாதைக்காரர்கள் செய்து வந்தனர் (Jeevanandam & Pande, 2017).

சுயமரியாதைக்காரர்கள் பொதுவாகவே அரசியல் விடுதலையினைக் காட்டிலும் சமூக விடுதலையினையே பெரியதெனக் கருதி செயல்பட்டு வந்தனர். இந்திய நாட்டின் ஆளுகை உரிமை கிடைக்க வேண்டும் என அரசியல் சீர்திருத்தக்காரர்களும், இந்திய மக்களுக்கு வகுப்புப் பிரிவினையும், சாதி வேற்றுமையும் தொலைய வேண்டும் என்பதாகச் சமூகச் சீர்திருத்தக்காரர்களும் போராடுகிறார்களே அன்றி, பெண் மக்களுள் ஒரு பகுதியார் அழிந்துவருவதைப் பாராமுகமாகவே பார்த்து வருகின்றனர் என்று தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுகிறார். (குடி அரசு. 22.08.1926) நாட்டின் விடுதலையென்பது பெண்களின் விடுதலையினைச் சார்ந்தே உள்ளது என்று சுயமரியாதைக்காரர்கள் ஆணித்தரமாக நம்பினர். (குடி அரசு. 29.06.1930) ஆணுக்கும் பெண்ணிற்கும் சமஉரிமை இல்லாத உலகில் சுதந்திரத்தைப் பற்றிப் பேச யாருக்கு தகுதி இருக்கிறது என்ற கேள்வியினை தந்தை பெரியார் அவர்கள் எழுப்பினார் (விடுதலை, 28.06.1973).

பெண்ணடிமைத்தனம் என்பது மனித சமூக அழிவு என்பதை நினைக்காததாலேயே வளர்ச்சி பெற வேண்டிய மனித சமூகம் என்பது பகுத்தறிவு இருந்தும் தேய்ந்துகொண்டே வருகின்றது என்று அறுதியிட்டார் தந்தை பெரியார் (குடி அரசு. 16.06.1935). உலகின் மனித வர்க்கத்தில் உள்ள அடிமைத் தத்துவம் ஒழிய வேண்டுமானால், பெண் மக்களை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும், கொடுமையும் ஒழிய வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்கள், இத்தகையவைகள் எல்லாம் ஒழிந்த நிலையே சமத்துவம், சுதந்திரம் என்னும் வெள்ளி முளைத்த தருணங்கள் என்றார் (குடி அரசு. 22.08.1926). 1929-ம் ஆண்டு நடைபெற்ற பெண்கள் மாநாடானது 'சுயமரியாதை' என்பது ஒவ்வொருவருக்குமான பிறப்புரிமை என்று வரையறுத்து, அத்தகையதானது 'சுயஆட்சி' என்ற கற்பிதத்தினைக் காட்டிலும் சிறந்தது என்றது (குடி அரசு, 08.12.1929).

உலகினில் பல கொடுமைகள் இருந்து வந்தாலும், அவற்றுள் அவசரமாய்த் தீர்க்கப்பட வேண்டியது தீண்டாமையும், பெண் அடிமைத்தனமுமே என்ற தந்தை பெரியார் அவர்கள் (குடி அரசு. 05.10.1930), பொதுவாகவே பெண் மக்களை ஆண்கள் நடத்துவது என்பது உயர்சாதி எனக் கருதிக் கொள்பவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களை நடத்துவதைவிட, பணக்காரன் ஏழைகளை நடத்துவதைவிட, எசமான் அடிமைகளை நடத்துவதைவிட மோசமானதாகவே உள்ளது என்ற தந்தை பெரியார் அவர்கள், மேற்குறிப்பிட்ட பிரிவினர்கள் எல்லாம் தாங்கள் இருவருக்கும் தொடர்பு ஏற்படும் இடங்களில் மட்டும்தான் ஒருவர் மற்றொருவரை தாழ்மையாய் நடத்தப்படுகின்றார்கள் என்றும், ஆனால், ஆண்களோ பெண்களைப் பிறப்பு முதல் இறப்பு வரை எல்லா தருணங்களிலும், அடிமையாகவும் கொடுமைப்படுத்தியுமே வருகின்றனர் என்ற சமூக அவலத்தினைப் பற்றி பதிவுசெய்கின்றார் (குடி அரசு. 08.02.1931).

## தனி உலகம் மற்றும் பொது உலகம்

பாலின (Gender) ஆய்வாளர்களின் கூற்றின்படி உலகின் சமூக வெளியானது தனி உலகம் (private sphere) மற்றும் பொது உலகம் (public sphere) என பொதுவான இரண்டு கூறுகளாக பிரித்தனர். அரசியல், அதிகாரம் போன்றவற்றைப் பிரதானப்படுத்திய பொது உலகமானது ஆண்களுக்கானதாகவும்; குடும்பம், உறவுவின் முறைகள் போன்றவற்றை பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான வெளியாகவும் ஆணாதிக்கச் சமூகம் வரையறை செய்து, அரசியல் அதிகாரங்களை தங்களுக்கே உரியதாக கட்டமைக்கின்றன என்ற வரலாற்று புரிதலை உலக அரங்கினில் முன்வைத்தனர்.

இந்த உலகத்தினில் ஆண்களின் கலாச்சாரக் கூறுகள் கவனிக்கதக்கதாகவும் (Visible), பெண்களின் கலாச்சாரக் கூறுகள் என்பது கவனிக்கப்படாததாகவும் (Invisible) கொண்டு மதம், அரசாங்கம், பொருளாதாரம் என அனைத்துவித நிறுவனங்களும் ஆண்களின் பார்வையினையும், அவர்களின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்வதாவே கட்டமைப்பட்டுள்ளது என பெண்ணிய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த சூழலில் சுயமரியாதை இயக்கத்தினர் இந்தப் பாகுபாடுகளை கட்டுடைத்தனர்.

வாழ்க்கை இன்ப, துன்பங்களில் ஆண்-பெண் இருவருக்கும் சமஉரிமை உண்டு. பெண்கள் தனி உடைமைச் சொத்து ஆகிவிடுவது என்பது ஒரு நாட்டின் பொதுநலன் கருதியும், பெண்களின் முன்னேற்றம் கருதியும் நன்மையன்று, எனவே அவசியமான மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்றும், சமூகத்தின் சரிபாதியாகிய பெண்கள் சமூகம் என்பது எந்தவித முனேற்றமும் இன்றி இப்படி அடிமைப்பட்டுக்கிடத்தல் என்பது நியாயம் அல்ல என்ற தந்தை பெரியார் அவர்கள் (குடி அரசு, 11.10.1948), 'சுதந்திரம் கொடுத்தால் பெண்கள் கெட்டுப் போய்விடுவார்கள்' என்று நினைத்து அவர்களை என்றைக்குமே அடிமைத் தளையில் கட்டிப்போட்டு வைத்திருப்பது என்பது பெரும் சமூகத் தீமையையே முடிவில் விளைவிக்கும் என்றார் (விடுதலை. 11.10.1948).

பெண்களுக்கு உண்மையான விடுதலை வரவேண்டும் என்ற சுயமரியாதைக்காரர்கள் (விடுதலை. 11.10.1948), பெண்களும் தாங்கள் சம உரிமை உடையவர்கள் என்ற உணர்ச்சியினை உடையவர்கள் என்ற உணர்வினைப் பெற்று இருக்க வேண்டும் என்று விரும்பினர் (விடுதலை, 28.06.1973). அப்படிப்பட்ட

சம உரிமையினை அவர்கள் பெற்றால், அவர்கள் ஆண்களை விட சிறப்பாகவே செயல்படுவார்கள் என்று தந்தை பெரியார் அவர்கள் உளப்பூர்வமாக நம்பினார் (Periyar, 2009;367).

ஒரு நாடு சிறப்பாக இருக்க வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒரே ஒழுக்கம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். அத்தகைய ஒழுக்கம் என்பதோ, கற்பு என்பதோ ஆண் பெண் இருபாலாருக்கும் உரித்தானதே இருக்க வேண்டுமே தவிர பெண்களுக்கு மட்டும் சார்ந்தது அல்ல என்ற தந்தை பெரியார் அவர்கள், (குடி அரசு. 22.12.1929) ஆணுக்குப் பெண் சரிநிகர் சமமானவர்கள், அவர்கள் வெறும் அடிமை மாத்திரம் இல்லை என்று தனது வாதத்தினை ஆணித்தரமாக முன்வைத்தார் (Periyar, 2009;369).

பெண்ணுரிமை என்பது என்னவெனில், ஆணிணைப் போலவே பெண்ணுக்கும் வீரம், வன்மை, கோபம், ஆளுந்திறம் உண்டு என்பதை ஆண்மக்கள் ஒப்புக் கொள்ளவதே ஆகும் என்ற தந்தை பெரியார், (குடி அரசு. 12.02.1928) 'ஆணைத் தொழுது எழவேண்டும்' என்று பெண்ணுக்கு நிபந்தனை இருந்தால், 'பெண்ணைத் தொழுது எழவேண்டும்' என்று ஆணுக்கும் நிபந்தனை இருக்கவேண்டும். இதுதான் ஆண்-பெண் சரிச உரிமை என்பது ஆகும் என்பதே சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றென சமூகவெளியினில் முன்வைத்தார் (குடி அரசு. 12.02.1928).

பெண்கள் ஒருபோதும் அவர்களுக்கு வேண்டியவைகளை தேர்வு செய்ய ஆண்களை அனுமதிக்க கூடாது என்றும், ஆண்களால் செய்யப்பட்ட சட்டங்களே இந்த உலகம் முழுவதும் பெண்கள் ஒடுக்கப்படுவதற்கான காரணம் என்றும் சுயமரியாதைக்காரர்கள் குறிப்பிடுகின்றனர் (Geetha, & Rajadurai 1929). மேலும், பெண்கள் ஆண்களைச் சார்ந்திருப்பதே அவர்களின் மீதான ஒடுக்குமுறைகளுக்கு முக்கிய காரணங்களில் ஒன்று என்று குடி அரசு இதழும் குறிப்பிடுகின்றது (குடி அரசு. 07.02.1932).

இந்நிலையில், பெண்கள் விடுதலை என்பது ஆண்களின் கைகளில் இருந்து ஒருபோதும் பெறமுடியாது என்பதனை சுயமரியாதைக்காரர்கள் நன்கு உணர்ந்திருந்தனர் (குடி அரசு. 12.08.1928). பூனை எலிகளுக்கோ, நரி ஆடுகளுக்கோ அல்லது கோழிகளுக்கோ ஒருபோதும் விடுதலையினை பெற்றுக் கொடுக்க முடியாது என்ற உவமையின் மூலம் ஆண்களின் முயற்சியினால் மட்டுமே செய்யப்படும் எந்தவித விடுதலை இயக்கமும், எந்த வழியிலும், வகையிலும் பெண்களுக்கு உண்மையான விடுதலையினைப் பெற்று தந்துவிட முடியாது என்ற தந்தை பெரியார் அவர்கள், ஆண்கள், பெண்களின் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் என்பது வளருவதுடன், பெண்கள் என்றென்றும் விடுதலை பெறமுடியாத அளவிற்குண்டான கட்டுப்பாடுகள் எல்லாம் பலப்பட்டுக் கொண்டே வரும் என்று குறிப்பிடுகின்றார் (குடி அரசு. 12.08.1928).

## கல்வி, குடியுரிமை, வேலைவாய்ப்பு

பொதுவாக முதல் அலைப் பெண்ணியவாதிகள் கல்வி, ஓட்டுரிமை, வேலைவாய்ப்பினில் சமவுரிமை, பொருளாதார விடுதலை போன்றவைகளை பெண்ணிய விடுதலைக்கான ஆயுதங்களாக வரையறுத்து அதனை அடைய போராடினர். மேரி உல்ஸ்டோன் க்ராஃப்ட் அவர்கள் தனது நூலான பெண்களின் உரிமைக்கான சான்றாவனம் (1792) (Vindication of the Rights of Women) என்பதில் பெண் மக்களுக்கு ஆண்களைப் போலவே சமமான கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திவிட்டால், அவர்கள் தங்களது முடிவுகளை தாங்களே எடுத்து, தங்களின் சுதந்திர வாழ்வினை வாழ முடியும் என்று குறிப்பிடுகின்றார். (Wollstonecraft, 2014) அதேபோல், பெண்ணிய விடுதலை என்பது பாலின சமத்துவமும் (sexual equality), பாலின சம நீதியுமே (gender justice) என்ற பெட்டி ஃப்ரைடன் அவர்கள் அதற்கான சமூக மாற்றத்தினை உரிய நீதி பரிபாலன முறைகளின் (constructing legislation) வழியேயும், வேலை வாய்ப்புகளை முறைபடுத்துவதன் மூலமும் (regulating employment practices) பெறலாம் என்று குறிப்பிடுகின்றார் (Friedan, 1997).

இந்தியச் சூழலில் பெண் கல்வி என்பது பெண் விடுதலைக்கு முக்கியமான அளவுகோல் என்று சுயமரியாதைக்காரர்கள் கருதினர் (குடி அரசு. 29.06.1930). இந்தியப் பெண்களின் கீழான நிலைமைக்கும் அடிமைத்தனத்திற்கும் கல்வி அறிவின்மை என்பது முக்கிய காரணிகளில் ஒன்றென கருதிய தந்தை

பெரியார் அவர்கள் (குடி அரசு, 03.06.1928), மனிதச் சமூகம் சுதந்திரமாகக் கவலையற்று இருக்க வேண்டுமெனில் பெண்களுக்கு கல்வி என்பது அவசியம் என்றார் (குடி அரசு. 16.06.1935).

ஆண்களின் கொடுமையினின்று அனைவரும் மீள வேண்டுமானால் ஒருவர் தவறாமல் கல்வி கற்க வேண்டும் என்று குறிப்பிட்டார் குஞ்சிதம் அம்மையார் அவர்கள் (குடி அரசு. 26.06.1932). சுயமரியாதை இயக்க ஆங்கில இதழான ரிவோல்டில் வெளியான இந்திய பெண்களின் துயரங்கள் என்ற ஆங்கில கட்டுரையானது, இந்திய பெண்களின் உரிமைகள் குறிப்பாக கல்வி உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதைக் குறித்து உரிய ஆதாரங்களுடன் விவரித்தது (Geetha, Rajadurai, 2018).

உலகில் பெண்கள் சுதந்திரம் பெற வேண்டும் என்பவர்கள், பெண்களை நன்றாகப் படிக்கவைக்க வேண்டும் என்றும், பெற்றோர்கள் தங்கள் ஆண் குழந்தைகளை இலட்சியம் செய்யாமல், பெண்களுக்கே அதிகம் செலவு செய்து படிக்கவைக்க வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்கள் (குடி அரசு. 01.03.1936; விடுதலை. 11.10.1948), குடும்பத்தில் நான்கு ஆண்களும், ஒரு பெண்ணும் இருந்தால் முதலில் அந்தப் பெண்ணைத்தான் படிக்கவைக்க வேண்டும் என்றார் (Periyar, 2009:367).

அதுவே, அவர்களை சட்டத்தின் மூலம் பெறப்படும் சொத்துரிமை, விவாகரத்து உரிமை மற்றும் இன்னும் பிற உரிமைகளை அனுபவிக்கச் செய்யக்கூடிய முக்கிய விடயமாக மாற்றும் காரணிகளில் பிரதானமானது என்றார் தந்தை பெரியார் (குடி அரசு. 05.06.1948). மேலும், கல்வி, அறிவு, செல்வம் ஆகியவைகள் இல்லாத பெண் என்பவர் தாயாகும் பொழுது எவ்வாறு நல்ல தாராள புத்தியும் சமத்துவ ஞானமும் திருப்தியான மனமும் உள்ள குழந்தைகளை பெறமுடியும் என்ற அடிப்படைக் கேள்வியினையும் சுயமரியாதை இயக்கத்தினர் எழுப்பினர் (குடி அரசு. 16.06.1935).

## பொருளாதார முன்னேற்றம்

சுயமரியாதை இயக்கமானது பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், சொத்துரிமைக்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது (குடி அரசு. 05.10.1930). "பெண்களும் தொழிலாளிகளே" என்ற நீலாவதி அம்மையார் அவர்கள், 'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்ற கருத்து ஒழிந்து பட்டு 'உழைப்பு என்பது மனித லட்சணம்' என்று ஏற்பட வேண்டும் என்றார் (புரட்சி, 29.04.1934). பெண்கள் சமையல் தவிர்த்து உயர்வேலையினைப் பார்க்கவேண்டும் என்றார் தந்தை பெரியார் (குடி அரசு. 29.01.1946).

அதேபோல், பெண்ணடிமைக்கான முக்கியமான காரணங்களாக சொத்துரிமை இல்லாததும், வாழ்க்கைத் துணையினைத் தேர்வு செய்யும் உரிமை இல்லாததுமே என்று சுயமரியாதைக்காரர், இலட்சுமி அம்மையார் அவர்கள் இரண்டாம் சுயமரியாதைக்கான பெண்கள் மாநாட்டினில் குறிப்பிடுகிறார் (குடி அரசு. 04.05.1930). பெண்களுக்கு சொத்துரிமையை வழங்கப்படாதற்குக் காரணம் இதுதான் என்று இதுவரை யாரும் காரணம் சொன்னதே கிடையாது என்ற விடயத்தை முன்வைத்த தந்தை பெரியார் அவர்கள், பெண்ணடிமை என்பதற்கு உள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே தலையாய காரணம் என்றும் (குடி அரசு. 05.10.1930) பெற்றோர்களின் சொத்தில் ஆணுக்குப் போலவே பெண்ணுக்கும் சரிபங்கு உரிமை உண்டு என்றும் வாதிட்டார் (Periyar, 2009;369). மேலும், பெண்களுக்குத் பெற்றோர் சொத்தில் உரிமை கிடையாதது ஏன் என்று எந்தப் பெண்ணாவது காரணம் கேட்டார்களா என்ற கேள்வியினை எழுப்பிய தந்தை பெரியார் அவர்கள், பெண்களை பயன்படுத்திக் கொள்கின்றவர்கள், அவர்களிடம் வேலை வாங்கிப் பயன் அடைகின்றவர்கள் அவர்களை காப்பாற்றமாட்டார்களா என்ற எண்ணமே என்றார் (குடி அரசு, 1946).

## பெண்ணுடல் மீதான பாலின அரசியல்

ஆணாதிக்க சமூகத்தினில் பொருளியல் விடுதலை என்பதனைத் தாண்டி பெண்ணடிமைத் தனத்திற்கான அடிப்படைகளை ஆராயத் தலைப்பட்ட இருபதாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் வந்த இரண்டாம் அலைப் பெண்ணியவாதிகளும், அவர்களின் போதமைகளிலிருந்து மேலெழுந்த

மூன்றாம் அலைப் பெண்ணியவாதிகளும் 'பெண்மை' என்ற கருத்தியல் மீதான கற்பிதங்களைக் கட்டுடைத்தனர். இவர்கள் உடலியல் சார்ந்த பாலின பேதங்களைப் (biological difference) பற்றி விரிவாக பேசலாயினர். வரலாற்று வெளியினில் பெண்கள் எவ்வாறு பண்பாடு மற்றும் சமூகத்தினில் அடிமைப்படுத்தப்பட்டனர் என்பதனை ஆவணம் செய்தனர். பாலின பேதத்தின் அடிப்படையிலான ஆண், பெண் வேலைப் பாகுபாடுகளிற்கான காரண காரியங்களையும், பெண்ணின சமத்துவத்திற்கு வேண்டிய அடிப்படைச் செயல்பாடுகளுக்கான கருத்தியல் புள்ளிகளையும் ஆராய்ந்தனர்.

இந்தியச் சூழலில் சாதியக் கட்டுமானத்தின் அடிப்படையானது பெண்ணுடலின் மீதே கட்டமைப்பட்டுள்ளது. சாதியின் புனிதத்துவத்தினை காக்கும் பொருட்டு பெண்களுக்கெனவே பிரத்யேகமான கட்டுப்பாடுகளை மதத்தின் பெயராலும், கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் பெயராலும் நிர்பந்திக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு வந்தனர் என்பதனை சுயமரியாதை இயக்கத்தினர் நன்குணர்ந்திருந்தனர். எனவே, பெண் விடுதலை என்பது பெண் மக்களின் விடுதலை மட்டுமே ஆகாது, அது ஒரு மிகப்பெரிய சமூக மாற்றத்திற்கான விதையாகும் என்பதனை அறிந்தே சுயமரியாதைக்காரர்கள் பெண்ணின மீட்சிக்கென தனித்ததொரு கவனத்தினைக் கொடுத்திருந்தனர். பெண்களின் கீழான நிலைமைக்கு காரணம் என்பது ஆணாதிக்கமும் அதனை நிலைநிறுத்தக் கூடிய சாதிய, மதக் கட்டுமானங்களுமே எனக் கருதி அவற்றினைக்களையவே சுயமரியாதை இயக்கத்தினர் போராடினர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும்.

## 'ஆண்மை' மற்றும் 'பெண்மை' என்ற கருத்தியல்கள் ஒழிய வேண்டும்

சமூகத்தினில் ஆண்மை (masculinity) என்ற கருத்தியல் என்பதனை நேர்மறையாகவும், பெண்மை (feminity) என்ற கருத்தியல் என்பதனை எதிர்மறையாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளது என நவீன பெண்ணியவாதிகளில் முக்கிய ஆளுமையான சிமோன் டி பிவோர் அவர்கள் குறிப்பிடுகின்றார் (de Beauvoir & Parshley, 1956). இவற்றையே பாலின அரசியல் ('sexual politics') என்று குறிப்பிடும் கேட் மில்லெட் அவர்கள் குடும்பம், கர்பத்தடை, பாலினப் பண்புகள் (sexuality), பாலியல் பணிவேறுபாடு (sexual division of labour), வன்புணர்ச்சி (rape) மற்றும் குடும்ப வன்முறை போன்றவற்றில் காணப்படும் பாலியல் பேதங்களை எடுத்துரைத்தார். சூ மோர்கன் அவர்கள் நூலில் இருந்து பெறப்பட்ட தரவு (Morgan, 2006). ஒவ்வொருவரின் உடலின் மீது ஒவ்வொருவருக்கும் உரிமையும் அதிகாரமும் உண்டெனும் போதிலும், ஆணாதிக்க சமூகத்தினில் பெண்களின் பாலினப் பண்புகளானது (women's sexuality) கட்டுப்படுத்தப்படுகின்றது.

அதுமட்டுமல்லாமல், கட்டமைக்கப்பட்ட பாலியல் பாத்திரங்களைக் (sex roles) களைந்து பாலின பேதமற்ற பணிமுறைச் சமத்துவம் ஏற்படச் செய்யவேண்டும் என்ற மரபுசாரா பெண்ணியவாதிகள் பெண்ணடிமைத்தனத்தின் காரணங்களை அதன் வேரிலிருந்து களைய முற்பட்டனர். பெண்களே உலக வரலாற்றினில் அடிமைப்படுத்தப்பட்ட முதல் இனக்குழு என்று வரையறுத்த மரபுசாரா பெண்ணியவாதிகள், ஆணாதிக்கம் (patriarchy) என்ற கருத்தியலே பெண் மக்களின் அடிமைத்தனத்திற்கான அடி ஆதாரம் என்று வரையறுத்தனர்.

மனித சமூக வளர்ச்சிக்கு இருபாலினத்தவருக்கும் இருபாலினர் குணங்களும் சமமாய் இருக்கவேண்டும். அதற்குண்டான வாய்ப்புகள் அனைத்தும் இயற்கையிலேயே இருந்திருக்கின்ற பொழுதும், ஆண்களின் சுயநலத்தால், சூழ்ச்சியால் ஒரு மாறுபட்ட செயற்கையான சமூகச் சூழல் உருவாக்கப்பட்டு பெண்களின் சமவாய்ப்புகளும், உரிமைகளும் இல்லாமல் செய்யப்பட்டு வருகின்றது என்றார் தந்தை பெரியார் (Kudiarasu, 12.02.1928). இத்தகைய நிலைக்கு ஆணிவேறான 'ஆண்மை' (masculinity) என்ற கருத்துருவாக்கத்தின் மீது சுயமரியாதைக்காரர்கள் மிகக்கடுமையான விமர்சனப் பார்வையினைக் கொண்டிருந்தனர். உண்மையான பெண் விடுதலையென்பது 'ஆண்மை' என்ற கருத்தியலை ஒழித்தாலொழிய ஏற்படாது என்ற தந்தை பெரியார் அவர்கள், அதற்காக கடினமாக உழைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியதுடன், அத்தகைய முன்னெடுப்புகளே பெண்கள் அதிகாரம் பெறவைக்க கூடிய வழி என்று தீர்க்கமாக கருதினார் (குடி அரசு, 12.08.1928) (Periyar, 2010).

தந்தை பெரியாரைப் பொறுத்தவரை, ‘ஆண்மை’ என்னும் பதமே பெண்களை இழிவுபடுத்தும் முறையில் உலக வழக்கில் உபயோகப்படுத்தப்படும் குறியீடு என்பதாகும் (குடி அரசு, 12.08.1928). நீண்ட நெடிய மானுட சமூகத்தில் ‘ஆண்மை’என்ற கருத்தாடல் உள்ளவரை பெண்களுக்கான எந்த விடுதலையும், முன்னேற்றமும் ஏற்பட்டுவிட முடியாது. அதனால் ‘ஆண்மை’ என்ற கருத்தியலானது மானுட சமூகத்தினில் இருந்து அழிக்கப்பட வேண்டும் என்றும், பெண்களால் ‘ஆண்மை’ என்ற தத்துவம் அழிக்கப்பட்டால் அல்லாது ‘பெண்மையின்’ விடுதலை என்பது சாத்தியம் இல்லை என்றும், (குடி அரசு. 12.08.1928).

ஆணின் தன்மைகள் என வீரம், கோபம், வன்மை, ஆளுந்திறம், என்றும், பெண்களின் தன்மைகள் என அன்பு, மென்மை, சாந்தம் மற்றும் பேணுந்திறம் என்றும் கூறுவதில் இருந்தே சமுதாயத்தினில் கட்டமைக்கப்பட்ட பாலின வேறுபாடுகளை உணரமுடிகின்றது என்றார் தந்தை பெரியார் (குடி அரசு. 12.02.1928). சுதந்திரம், வீரம் முதலிய குணங்கள் உலகத்தில் ‘ஆண்மை’க்குத் தான் உண்டு என்று ஆண்மக்களே முடிவுகட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும் என்ற உதாரணத்தினையும் முன்வைத்தார் தந்தை பெரியார் (குடி அரசு, 12.02.1928).

## பெண்களின் கலாச்சாரம்

ஆணாதிக்க சமூகமானது தாய்மை, தாய்மை அடைதல் என்பவைகளை பெண்களுக்கே உரித்தான ஒரு சமூகக் கட்டாயமாக நிர்பந்ததிக்கப்பட்டதுடன், பாலியல் அடிமைகளாகவும் (sexual slaves), பெண்களின் பாலினப் பண்புகளானது (women’s sexuality) கட்டாயப்படுத்தி அவர்களின் சுயமரியாதையானது மறுக்கப்படுகின்றது (honor violated). இனப்பெருக்கம் (reproduction) என்பது பெண்ணடிமைத் தனத்திற்கான ஆதாரங்களில் முக்கியமாக கருதும் மரபுசாரா பெண்ணியவாதிகள் (radical feminist), நவீன கால தொழில் நுட்பங்கள் இனப்பெருக்கம் தொடர்பான பிரச்சனைகளிலிருந்து மாற்றம் செய்யக்கூடிய புரட்சியினை செய்ய வல்லது என்று நம்பினர். விபச்சாரம் என்பதுமே ஒருவகையான வற்புறுத்தப்பட்ட பாலீடுபாடு (form of sexual coercion) என்றனர். எனவே பெண்கள் வற்யுறுத்தப்பட்ட தாய்மை (forced motherhood), பாலியல் ரீதியிலான அடிமைமுறை (sexual slavery) போன்றவற்றிலிருந்து விடுபட்டு தனது உடல் மீதான உரிமையினை மீட்டெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியதுடன் பெண்களுக்கான கலாச்சாரத்தினை (female culture) பற்றி விவாதித்தனர் (Morgan, 2006).

## மொழியியல் அரசியல்

பெண்களின் பண்பாட்டு கலாச்சாரத்தினை மீட்டெடுப்பதன் மூலமே புதியதோர் உலகினை படைக்க முடியும். அந்த உலகமானது பெண்களின் பார்வையில் கலை இலக்கியம் மூலம் வெளிப்படுத்த வேண்டும். வரலாற்றினில் ஆண்களின் ஆதிக்கப் புள்ளியினை மையப்படுத்த வேண்டும். பெண்களை குறிக்கும் புதிய சொல்லாடல்களை (alternate spelling) உமைன் (womyn), உமோன் (womon) and உமின் (womin) பயன்படுத்த வேண்டும் என்று வரலாற்று வெளியினில் பெண்ணியவாதிகள் தங்களின் குரல்களை முன்வைத்து பல போராட்டங்களை பெண் இன எழுச்சிக்காக போராடினர் (Morgan, 2006; Davis, 1990).

இந்திய வெளியினில் பெண்ணுடல் மீதான மொழியியல் அரசியலைக் (linguistic politics) குறித்து சுயமரியாதைக்காரர்கள் சமூக வெளியில் வெளிப்படையாக பேசி விளிப்புணர்வுகளை ஏற்படுத்தி வந்தனர். ‘விபச்சாரி’ (prostitute) என்ற வார்த்தையினைப் பற்றி தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடும்பொழுது அந்த வார்த்தையானது பொதுப்புத்தியில் விபச்சாரம் (prostitution) என்ற தொழிலில் ஈடுபடும் பெண்களை மட்டுமே குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. அதேபோல் அத்தொழிலினில் ஈடுபடும் ஆணினைக் குறிக்கும் பொருட்டு அதற்கு இணையான சொல் என்பது பெரும்பாலான மொழிகளின் சொற்பிறப்பியலியலில் (etymology) இல்லை என்பதனைச் சுட்டிக்காட்டியதுடன், ‘விபச்சாரன்’ என்ற சொற்பதத்தையும் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தார் (குடி அரசு, 26.10.1930).

மேலும், 'விதவைத் திருமணம்' (widow remarriage) என்கிற சொல்லினைப் பற்றி குறிப்பிடும்போழுது அந்த வார்த்தையானது பெண்கள் விடயத்தில் தான் பயன்படுத்தப்படுகிறதே தவிர ஆண்கள் விடயத்தில் குறிப்பிடப்படுவது இல்லை என்பதையும், அதைப் போலவே மனைவியை இழந்த ஆண்கள் இரண்டாவதாக செய்யும் திருமணங்களை 'விதவைத் திருமணம்' என்று அழைப்பதில்லை என்பதையும் குறிப்பிட்டதுடன், அத்தகைய திருமணத்தை 'விதவன் திருமணம்' என்றே அழைக்கவேண்டும் என்றார் தந்தை பெரியார் (விடுதலை, 07.04.1959).

அதேபோல், 'கற்பு' என்ற சொல்லோ அதற்கு இணையான வேறு ஒரு சொல்லோ, ஆணுடல் மீதான கற்பின் அவசியத்தை குறிக்க இதுவரை பயன்படுத்தப்படுவதே இல்லை (குடி அரசு., 12.02.1928) அதுபோலவே, ஆண்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க எந்தவொரு மொழியிலும் தனி வார்த்தைகள் என்பது இல்லை. அத்தகைய சொல்லாடல்கள் பயன்பாட்டில் இல்லாமைக்கு மொழியில் நிலவிய வருகின்ற ஆணாதிக்க மனோபாவமே தவிர வேறேதும் காரணம் இல்லை என்ற தந்தை பெரியார் அவர்கள் (குடி அரசு. 08.01.1928; 26.10.1930), அதைத்தவிர அக்கருத்துக்கள் எல்லாம் அறிவுக்கு ஏற்ற முறையில் சமூகத்தில் கட்டமைக்கப்படவில்லை என்பதனைக் குறிப்பிடுகின்றார் (விடுதலை, 04.05.1973). மேலும், பெண்கள் மிகவும் கீழானவர்களாகவும், கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கச் செய்யவும் ஏற்படுத்தப்பட்ட கற்பிதங்களே இந்த 'கற்பு' என்ற கருத்தியலாகும். இவ்வாறு பெண்களை அடிமைகொள்ளச் செய்யக்கூடிய கருத்துக்களை எந்தவொரு காலமும், அறிவுடைய மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடவே கூடாது என்று தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிடுகிறார் (Periyar, 2009:366).

அதுமட்டுமல்லாமல், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பாலினபேதத்தின் அடிப்படைகொண்டு அழையாமல், பாலின பேதமற்ற சொல்லாடல்கள் மூலமே அழைக்க வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்கள், பெண் குழந்தைகளுக்கு பெயர்கள் இடும்பொழுது கூட பாலின பேதமற்ற சொற்களையே பயன்படுத்தவேண்டும் என்றதுடன், அவர்களின் உடைகளும் ஆண்களைப் போல அணியப் பழக்கப்படுத்தி, எளிதில் 'இவர் ஆணா, பெண்ணா' என்று மற்றவர்கள் அறியா வகையில் வளர்க்க வேண்டும் என்றார். மேலும், பெண்களும் தங்களை, 'பெண் இனம்' என்று யாரும் கருத எந்தவொரு இடமும் எண்ணமும் உண்டாகும்படி நடவாமல் இருப்பதுடன், ஒவ்வொரு பெண்ணும், தங்களுக்குள்ளான பேதம், கட்டுப்பாடுகள், மற்றும் உயர்வு-தாழ்வுகள் ஏற்படுவதன் காரணங்கள் என்பவைகள் என்ன என்பதனை அறிந்து கொண்டு சுயமரியாதையுடன் வாழவேண்டும் என்றார் தந்தை பெரியார் (குடி அரசு. 29.01.1946).

## 'அழகு' என்ற கற்பிதம்

அழகு' போன்ற கருத்தியல்களானது எவ்வாறு பெண்களை சிந்திக்க விடாமல் மட்டுப்படுத்துகிறது என்று சுயமரியாதைக்காரர்கள் விளக்கினர். பெண்களின் சிறப்புகளை குறித்து பயன்படுத்தப்படும் பெருமைகளிலும், வருணனைகளிலும் பெண்களின் உடல் அங்கங்களையும், அவயங்களையும் பற்றிய குறிப்புகள் ஐம்பது வரிகள் இருந்தால், அவர்களது அறிவு, அவர்களால் ஏற்படும் பயன், சக்தி, திறமை போன்றவற்றைப் பற்றிய குறிப்புகள் வெறும் ஐந்து வரிகள்கூட இருப்பது இல்லை. பெண்களின் உருவை அலங்கரிப்பது, அழகை மெச்சுவது, சாயலைப் புகழுவது என்பவைகள் எல்லாம் பெண்கள் சமுதாயத்திற்கே ஓர் அவமானம், இழிவு என்பதுடன், அடிமைத்தனமான காரியமாகவே அமைகின்றது என்றார் தந்தை பெரியார் அவர்கள் (குடி அரசு. 29.01.1946). இவ்வாறெல்லாம் கூறுவதால், பெண்களை தரமான, நாகரிகமான, சுத்தமான, கண்ணுக்கு வெறுப்பில்லாத, இரம்மியம் அற்றவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லுவதாகாது என்ற தந்தை பெரியார் அவர்கள், அத்தவைகளெல்லாம் மக்கள் கவனத்தை ஈர்க்கத் தகுந்த, நவநாகரீக அலங்காரத்தால் செய்யவல்லது அல்ல என்றும், அவைகள் சாதாரண ஆடம்பரம் குறைந்த தன்மையிலே பெற முடியும் என்றும் தந்தை பெரியார் அவர்கள் அறிவுறுத்தினார் (குடி அரசு. 29.01.1946).

## மாற்று நிறுவனம்

பெண்மையின் அடையாள மீட்பினைப் (revalorization of femaleness) பற்றி பேசி, பெண்களின் பண்பாட்டு கலாச்சாரத்தினை கொண்டாடுவதன் மூலம் சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்பினையே மாற்ற முடியும் என்று அட்ரின்னே ரிச் குறிப்பிடுகின்றனர் (Rich, 1986). பெண்கள் பொதுவாகவே மிக அதிக அளவில் குடும்பம் மற்றும் நெருங்கிய உறவுகள் மூலமே கொடுமையினை (oppressed primarily) அடைகின்றனர். திருமணம் என்ற நிறுவனமே வலியுறுத்தப்பட்ட தாய்மை (forced motherhood), பாலியல் ரீதியிலான அடிமைமுறையினை (sexual slavery) நிர்பந்திக்கின்றது. இதிலிருந்து விடுபட மாற்று நிறுவனத்தினை அமைக்க வேண்டும்.

## வற்யுறுத்தப்பட்ட தாய்மை

ஆணாதிக்க சமூக அமைப்பானது பெரும்பாலும் பெண்களை பாலியல் இச்சைக்கான பொருளாகவும், சொத்தாக எண்ணியதுடன் (குடி அரசு. 24.11.1929), பெண்களை குழந்தை பெரும் இயந்திரமாகக் கருதி, அவர்களை விலங்குகளுக்குச் சமமாக நடத்தி வந்துள்ளது என சுயமரியாதைக்காரரான நீலாவதி அம்மையார் அவர்கள் குறிப்பிடுகிறார். (குடி அரசு, 28.06.1931) சமூகத்தில் புனிதமானது எனக் கருதப்பட்டு வரும் 'தாய்மை' என்ற நிலைமையின் மீதும் சுயமரியாதைக்காரர்கள் பகுத்தறிவுப் பார்வையினையே கொண்டு இருந்தனர். பெண்ணடிமைத்தனம் என்பது தாய்மை என்ற கருத்துருவில் நிலைநிறுவப்படுகிறது என்று அறிந்த சுயமரியாதைக்காரர்கள், பெண்கள் தங்களின் உடலின் மீது உரிமை கொண்டு தாங்கள் தாய்மை அடைவது குறித்துத் தேர்வு செய்யும் உரிமையினைப் பெற்றிருக்க வேண்டும் என்று போராடினர். பெண்கள் தாய்மை அடைவதில் பெருமை கொள்ளாததுடன், குழந்தைப் பேற்றினை நிறுத்த வேண்டும் என்றும், வெறும் குழந்தைகள் பெறும் இயந்திரம் பெண்கள் இல்லை என்றும், மனித சமூகத்தில் இனப்பெருக்கம் செய்யும் பொறுப்பு பெண்களுக்கு மட்டுமே தனித்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்கிறார் தந்தை பெரியார் அவர்கள் (Periyar, 2004:74-79).

பொதுவாகவே, பெண்களின் உடல் நலம், குழந்தைகளின் நன்மை, நாட்டின் பொருளாதார நலன், குடும்பச் சொத்து குறையாமல் இருக்க வேண்டும் என்பவைகளைக் கருதியே கர்ப்பத்தடை என்பதனை சமூகத்தில் பலர் ஆதரித்து வந்தபொழுது (குடி அரசு. 06.04.1930), சுயமரியாதைக்காரர்களோ இவைகள் எதையும் முக்கியமாகக் கருதாமல், பெண்களின் நலத்தினையும், விடுதலையினையும், தன்னதிகாரத்தினையும் கருதியே கர்பத்தடை என்ற முறையினை ஆதரித்தனர். (குடி அரசு, 06.04.1930) உண்மையான விடுதலை என்பது பெண்களுக்கு கிடைக்க வேண்டுமானால் பெண்கள் குழந்தைகள் பெறும் தொல்லை என்பதனை அடியோடு ஒழிந்துபோகச் செய்ய வேண்டும் (குடி அரசு. 12.08.1928).

## திருமணம் என்ற நிறுவனம்

பெண்ணடிமைத் தனமானது எவ்வாறு தனியுடமைத் தத்துவத்துடனும், திருமணம் என்ற நிறுவனத்துடனும் பிண்ணிப் பிணைந்துள்ளது என்பதனை சுயமரியாதைக்காரர்கள் தக்க தர்க்கவியல் புரிதலுடன் அறிந்து கொண்டிருந்தனர். இந்த உலகினில் தனிச் சொத்துடைமையும், 'மேலுலகம்', 'மோட்சம்' போன்ற கருத்துக்களின் அடிப்படையிலேயே 'திருமணம்' என்பதும், 'வாழ்க்கை ஒப்பந்தம்' என்பதும் ஏற்படுத்தப்படுகின்றன. (விடுதலை, 16.12.1944) ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண் மகன் தான் கணவனாக இருக்கவேண்டும், அதனுடன் அப்பெண்ணானவர் மற்ற யாருடனும் கலவி செய்யக்கூடாது என்று கருதிவருவதன் அடிப்படை நோக்கமானது (விடுதலை. 11.10.1948), தனிச் சொத்துடைமையே ஆகும்.

தனியுடைமைச் சுதந்திரம் இல்லாதிருந்த பொழுது ஆணிற்கு தனக்கே குழந்தை பிறக்கவேண்டும் என்கின்ற நிர்பந்தம் என்பது ஒன்று உதித்திருக்க இடமே இல்லை என்ற தந்தை பெரியார் அவர்கள் (விடுதலை, 20.04.1959), சொத்தில் இருந்துதான் இந்த திருமண முறை என்பது பிறந்திருக்க வேண்டும் (விடுதலை, 20.04.1959) என்ற மார்க்ஸியப் பார்வையினையே தந்தை பெரியார்

அவர்களும் உறுதியாக நம்பியதுடன், பொதுமக்களிடம் அதனை கொண்டு சேர்க்கவும் செய்தார் (விடுதலை, 11.10.1948) (Engles, 1909).

அதுமட்டுமல்லாமல், இந்தியாவினைப் பொருத்தமட்டில், சேமித்து வைத்துள்ள பொருளினைப் பாதுகாப்பதற்கு மட்டுமல்லாமல், தனது மரணத்திற்கு பின்னான சிரமபரிகாரம்/கரும காரியங்கள் முதலியவற்றை செய்ய ஒரு ஆண்மகன் தேவை என்று 'இந்து' மதமானது வலியுருத்தி வந்துள்ளது (விடுதலை, 17.02.1951). சொத்துக்காக குழந்தைகள் இல்லாவிட்டாலும் திதி, திவசம், போன்றவற்றை செய்வதற்காகவே ஆண் குழந்தைகள் என்பது தேவைப்படுகிறது (விடுதலை. 11.10.1948). ஒருவர், தான் இறந்தபிறகு தன் பேரைச் சொல்லித் தனக்காகக் கருமம் செய்ய குழந்தைகளைப் பெற்றுவிட்டுச் செல்வது அவசியமென்றும், குழந்தைப் பேறில்லாதவர்களால் சொர்கத்திற்குச் செல்ல இயலாது என்றும் கூறி 'இந்து' மதமானது குழந்தைப் பேற்றினை கட்டாயமாக்கியது (விடுதலை. 11.10.1948).

இதன் மூலம் அறிவது என்னவெனில், இந்த உலக வாழ்விற்காக, சொத்துரிமைக்காக ஒரு குழந்தை பெறுவது அவசியாமாக்கப்பட்டதை விட, வைதீகத்திற்காக ஒரு குழந்தையை பெறவேண்டிய அவசியம் என்பது இந்திய சமூகத்தில் பார்ப்பனிய கருத்தியலின் அடிப்படையினில் வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது. இம்முறையினைப் பற்றி பாபாசாகேப் அம்பேத்கார் அவர்களும், பின்னர் சமூக ஆய்வாளர்களான ஷர்மிளா ரெகே மற்றும் உமா சக்கரவர்த்தி அவர்களும் 'பார்ப்பனிய ஆணாதிக்கம்' (Brahmanical Patriarchy) என்ற கருத்தியலாக சான்றோர் அவையினில் முன்மொழிந்தார்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும் (Rege, 2013; Chakravarti, 1993).

## சுயமரியாதைத் திருமணம்

திருமண முறைகளில் அடிப்படையான மாற்றங்கள் வேண்டும் என்று உணர்ந்த சுயமரியாதைக்காரர்கள் அத்தகைய மாற்றங்களுக்கான முன்னெடுப்புகளை சமூகத்தில் ஆக்கபூர்வமாக செய்துவந்தனர். சமூகத்தில் நிகழும் மாற்றங்கள் எல்லாம் அறிவு மற்றும் அவரவர்களின் வசதிகளை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்க வேண்டும் என்றார் தந்தை பெரியார் (Periyar, 2009:354). திருமண முறைகளில் செய்யக்கூடிய மாறுதல்கள் எல்லாம் அவரவர் பகுத்தறிவினையும் அனுபவ அறிவினையும் அனுசரித்துப் பார்த்தே நடக்க வேண்டும் என்கின்ற அடிப்படைகளிலே தான், சுயமரியாதைத் திருமணங்கள் என்பவைகள் சமூதாயத்தில் முன்னெடுக்கப்பட்டனவே தவிர வெறும் மாறுதல் என்பதற்காகவோ (பகுத்தறிவு. 07.10.1934), அல்லது நாத்திகக் கொள்கை என்பதற்காகவோ இல்லை என்றார் தந்தை பெரியார் (Periyar, 2009:367).

## முடிவுரை

முதல் அலைப் பெண்ணியவாதிகள் பெண் மக்கள் விடுதலைக்காக முன்வைத்த வழிமுறைகளான (strategy) கல்வி, குடியுரிமை மற்றும் பொருளாதார வாய்ப்புகளாகட்டும், 1960களில் தொடங்கிய இரண்டாம் மற்றும் மூன்றாம் அலைப் பெண்ணியவாதிகள் முன்வைத்த பெண்ணுடல் மீதான சுதந்திரம் மற்றும் மாற்று நிறுவனங்களை ஏற்படுத்துவதன் முக்கியத்துவனகளைக் குறித்த வாதங்களாகட்டும் உலக அளவினில் சிறப்பான கவனத்தினைப் பெற்றன. மேற்குலகினில் இவ்வாறு முற்போக்கு வாதங்களை வைக்கக்கூடிய ஒரு சமூக வெளியானது இயல்பாகவே இந்தியப் பொருளாதார-பண்பாட்டு-கலாச்சார வெளியினைக் காட்டிலும் எளிதாக ஏற்படுத்தப்பட்டிருந்தது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது ஆகும். ஆனால், இந்திய சமூகச் சூழல் என்பது வேறு.

பெண்ணுடலினைக் கட்டுப்படுத்துவன் மூலமே சாதிய-மதவாத அடிப்படைக் கட்டமைப்பானது இங்கே நிலை நிறுத்தப்பட்டு வருகின்றது. எனவே, இந்திய சூழலில் பெண்ணிய விடுதலை என்பது வெறும் பெண் மக்கள் மீட்சி என்பதைத் தாண்டி சாதியக் கட்டமைப்பினையே சிதைக்கவல்லதாகவே உள்ளது. இந்த வேளையில், இந்திய சூழலில் தந்தை பெரியார் அவர்களும், அவரின் சுயமரியாதை இயக்கத்தினரும் 1920களின் பிற்பகுதியினில் முன்வைத்த பெண் மக்கள் விடுதலைக்கான வழிமுறைகள் சற்று சிறப்பான இடத்தினைப் பெறவே செய்கின்றன. எவ்வாறெனில், சுயமரியாதை

இயக்கத்தினர் மூன்று அலைப் பெண்ணியவாதிகளின் வாதங்களையும் ஒருங்கே எந்த ஒரு பண்பாட்டு-கலாச்சார நிர்பந்தங்களுக்குள்ளும் ஆளாகாமல் எந்த சமரமுமின்றி முன்வைத்தனர் என்பதை வரலாறானது பல்வேறு தரவுகளின் மூலம் பதிவு செய்கின்றது.

## References


Aanaimuthu, V., (2009) Periyar EVR Sinthanaigal, Periyar EV Ramasamy-Nagammai Educational Research Foundation, Chennai, India.

Chakravarti, U., (1993), Conceptualising Brahmanical Patriarchy in Early India: Gender, Caste and State, Economic and Political Weekly 28, 14, 579-585.

Davis, A.Y., (1990) Women, Culture and Politics, Vintage Books, New York

de Beauvoir, S., & Parshley, HM., (1956) The Second Sex, Jonathan Cape, London.

Engles, F., (1909) The Origin of the Family Private Property and the State, Charles H. Kerr and Company, Chicago.

Friedan, B., (1997) The Feminine Mystique, W.W. Norton and Company, New York.

Geetha, V., Rajadurai, S.V., (2018) Revolt-A Radical Weekly from Colonial Madras, Periyar Dravidar Kazhagam, Chennai.

Jeevanandam, S., Pande, R., (2017) Devadasis in South India: A Journey from Sacred to Profane Spaces, Kalpaz Publications, Delhi, India.

Morgan, S., (2006) The Feminist History Reader, Routledge, London.

Natarajan, S., (1997) Another Stage in the Life of the Nation: Sadir, Bharathanatyam, Feminist Theory, PhD diss., University of Hyderabad, India.

Periyar, (2004) Pen Yen Adimaiyannal? Periyar Suyamariyathai Pirachara Niruvanam, Chennai, India.

Periyar, (2009) Women Enslaved, Critical Quest, New Delhi.

Periyar, (2010) Azhiyattum Aanmai, Periyar dravida kalagam, Chennai, India

Rajadurai, S.V., Geetha, V., (1999) Periyar Suyamariyathai Samadharman, Vidiyal pathippagam, Coimbatore, India.

Rege, S., (2013) Against the Madness of Manu: B.R. Ambedkar's Writings on Brahmanical Patriarchy, Navayana, India

Rich, A., (1986) Of Woman Born Motherhood as Experience and Institution, W.W. Norton and Company, New York.

Wollstonecraft, M., (2014) Vindication on the Rights of Woman. New Haven: Yale University Press, New Haven.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License